**கொழும்பை அண்டிய புகையிரத வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டத்தின் கீழான போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியின் - 2019**

---

கொழும்பை அண்டிய புகையிரத வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டத்தின் கீழான போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆறு மாத காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய 3806 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் (iv) ஆம் உறுப்புரையின் 4.02(அ) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவுள்ளதுடன் இலங்கைப் புகையிரதத் திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. பின்வரும் வெளியீடுகள் உள்ளடங்கிய புகையிரத வலையமைப்பின் வினைத்திறன், நிலைபேறான தன்மை மற்றும் பாதுகாப்பு என்பவற்றை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும்.

(i) முன்னேற்றப்பட்ட செயற்பாட்டு வினைத்திறன்.
(ii) வலுப்படுத்தப்பட்ட பராமரிப்பு இயலளவு.
(iii) முன்னேற்றப்பட்ட புகையிரத பாதுகாப்பு
(iv) தரமுயர்த்தப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிலையம் மற்றும் செயற்திட்ட அமுலப்படுத்தல் இயலளவு மற்றும் வலுப்படுத்தப்பட்ட எதிர்கால புகையிரத செயற்திட்டங்களின் தயார்ப்படுத்தல்.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 33,878.40 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 192 மில்லியன் தொகையானதுடன் இதில் ரூபா 28,232 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 160 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 5,646.40 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 32 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 செப்தெம்பர் 06 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும்

விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த

இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடு

| கணகீட்டுக் குறைபாடு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| மீளாய்வாண்டின் போது இச் செயற்திட்டத்திற்கான பின்னோக்கிய நிதிக்காக பெறப்பட்ட ரூபா 8.36 மில்லியன் தொகையான ஜீஓஎஸ்எல் நிதி பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் கொழும்பை அண்டிய புகையிரதச் செயற்திட்டம் என அழைக்கப்பட்ட வேறு செயற்திட்டத்திற்கு | நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்படுதல். | செயற்திட்ட அலுவலகத்தில் கணக்குகளை சீரமைத்தல் மற்றும் 7002 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்குகளின் கீழ் விடுவிக்கப்பட்ட நிதிகளை கணக்கீடு செய்வதற்காக ஜீஓஎஸ்எல் நிதிகளை கையாள்வதற்கு இரண்டு செயற்திட்டங்களிற்காக இரண்டு வங்கிக் கணக்குகள் திறக்கப்பட்டு | செயற்திட்ட நிதிகளின் அதிகாரமளிக்கப்படாத மாற்றத்தை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| மாற்றப்பட்டிருந்தது. இதன் விளைவாக அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 8.36 மில்லியனால் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இரண்டு காசுப் புத்தகங்கள் பேணப்பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 8.36 மில்லியன் மிகுதி தொகை சரியான முறையில் ஆர்ஈஐபி கணக்குகளிலிருந்து சீஎஸ்ஆர்பி கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. |

## 2.2 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | விளைவு | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2018 மே 16 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானம் | ஆசிய அபிவிருத்தி வங்கியின் பின்னோக்கிய நிதியிடலின் கீழ் தொழிற்படுகின்ற கொழும்பை அண்டிய புகையிரத வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டத்தின் (சீஎஸ்ஆர்ஈஐபி) உப செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு 2018 மே 16 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டம் அனைத்து பூர்வாங்க பெறுகை நடவடிக்கைகளையும் அமுல்ப்படுத்தி அபிவிருத்திச் செயற்திட்டங்களிற்கான கேள்விகளை கோரும். கொழும்பை அண்டிய புகையிரதச் செயற்திட்டத்தின் பதவியணியினரின் சம்பளங்களிற்காக பின்னோக்கிய நிதியிடலின் கீழான கடனிலிருந்து எந்தவொரு தொகையையும் செலுத்துவதற்கு அல்லது | அங்கீகரிக்கப் படாத செலவினம். | 2018.05.09 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்துடன் சீஎஸ்ஆர்பி ஆல் ஆர்ஈஐபீ இன் அபிவிருத்தி முயற்சிகளிற்கான அனைத்து பெறுகை நடவடிக்கைகள் மற்றும் கேள்வி கோரல் பின்னர் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவத்திற்காக ஆர்ஈஐபி, நிதி குறியீடு – 12 இன் கீழ் நிதிகள் வழங்கப்பட்டிருந்தன. | கொழும்பை அண்டிய புகையிரதச் செயற்திட்டத்தின் பதவியணியினரின் சம்பளங்களிற்காக பின்னோக்கிய நிதியிடலின் கீழான கடனிலிருந்து எந்தவொரு தொகையையும் செலுத்துவதற்கு அல்லது மீளளிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

மீளளிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்காத போதிலும் கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 37 எண்ணிக்கையான பதவியணி உறுப்பினர்களிற்கு புகையிரத வினைத்திறன் முன்னேற்ற செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவ செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட செயற்திட்ட நிதியிலிருந்து 2019 செப்தெம்பர் தொடக்கம் 2019 திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 25,417,796 தொகையை செயற்திட்டம் செலுத்தியிருந்தது.

## 3. பௌதீக செயன்முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

பின்வரும் வெளியீடுகள் உள்ளடங்கிய புகையிரத வலையமைப்பின் வினைத்திறன், நிலைபேறான தன்மை மற்றும் பாதுகாப்பு என்பவற்றை முன்னேற்றுவதற்கு செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுகின்றது.

(அ) முன்னேற்றப்பட்ட செயற்பாட்டு வினைத்திறன்.
(ஆ) வலுப்படுத்தப்பட்ட பராமரிப்பு இயலளவு.
(இ) முன்னேற்றப்பட்ட புகையிரத பாதுகாப்பு.
(ஈ) தரமுயர்த்தப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிலையம் மற்றும் செயற்திட்ட அமுலப்படுத்தல் இயலளவு மற்றும் வலுப்படுத்தப்பட்ட எதிர்கால புகையிரத செயற்திட்டங்களின் தயார்ப்படுத்தல். 2019 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 33,878.40 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 192 மில்லியன் தொகையாகும். பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் 5 சதவீத முதலீட்டுக் கிரயம், மீண்டெழும் கிரயம், நிகழத்தக்கவைகள் மற்றும் நிதிக் கட்டணங்கள் ஆக காணப்பட வேண்டிய போதிலும் செயலாற்றலானது மீளாய்வாண்டின் இறுதியில் 03 சதவீதம் மாத்திரமே அடைந்து கொள்ளப்பட்டிருந்தது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | பாணந்துறை – வெயாங்கொடை தொடர்பான ஆரம்ப சாத்தியவள ஆய்வின் இறுதி அறிக்கை இஜிஸ் இன்ரநஷனல்/ றிசோசஸ் டெவலப்மென்ட கென்சல்ரன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டால் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் இது 2018 பெப்ரவரி 08 இல் கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. சாத்தியவள இறுதி அறிக்கையின் 14.1 ஆம் அமுல்ப்படுத்தல் பட்டியலிடப்பட்ட அட்டவணையின் 14.2.1 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் மருதானை Loco சந்தி மேம்படுத்தல்கள், தொலைத்தொடர்பு, பயணச்சீட்டு மற்றும் கட்டண சேகரிப்பு மற்றும் செயற்பாட்டு கட்டப்பாட்டு நிலைய கட்டிட நிர்மாணம் மாத்திரமே அமுல்ப்படுத்துவதற்கு முதலாவது முன்னுரிமை வழங்கப்பட வேண்டியிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் சாத்தியவள ஆய்விற்கு முரணாக 13 புதிய வேலைகளிற்கான ஐ.அ.டொலர் 89.15 மில்லியன் தொகையானது 2019 ஆகஸ்ட் 20 இல் செயற்பாட்டிற்கு பதிதாக ஆரம்பிக்கப்பட்ட புகையிரத வினைத்திறன் முன்னேற்ற செயற்திட்டத்திற்காக ஒக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மோசமான செயற்திட்ட அமுல்ப்படுத்தல் | முன்னரான சாத்தியவள ஆய்வு அறிக்கையிலுள்ள அபிவிருத்தி இடையீடுகள் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான அங்கீகாரமொன்றாக காணப்படுவதில்லை. ஆர்ஈஜபி ஆல் அமுல்ப்படுத்தப்படும் அனைத்து அபிவிருத்தி முயற்சிகளையும் விபரமாகவும் எல்லை முறையிலும் (border manner) அமைச்சரவை விஞ்ஞாபனம் விளக்குகின்றது. | சாத்தியவள ஆய்வு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு புகையிரதத்தின் முன்னுரிமை தேவைப்பாடு மற்றும் நிதி உடன்படிக்கை விசேட அறிவுடைய உத்தியோகத்தர்களால் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சரால் | மோசமான செயற்திட்ட | ஆர்ஈஜபி இல் உள்ளடக்கப்பட | வேலை முன்மொழிவுகளிற்கா |

| | | | |
|---|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு 2018 மே 16 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பின்வரும் முன்மொழிவுகளிற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.<br>**I.** புகையிரத பயணச்சீட்டு வழங்கல் மற்றும் இருக்கை ஒதுக்கீட்டு முறைமை (ஆர்ரீஆர்எஸ்) மற்றும் புகையிரத றேடியோ தொலைத்தொடர்பு முறைமை (ஆர்ஆர்ரீஎஸ்)<br>**II.** மாலிகாவத்தையில் பாடசாலை வீதி பாலத்தை நிர்மாணித்தல்<br>**III.** மருதானையில் கொழும்பு புகையிரத கட்டுப்பாட்டு நிலையம் மற்றும் புகையிரத செயற்பாட்டு தலைமை அலுவலகத்தை நிர்மாணித்தல்<br>**IV.** இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தின் அபிவிருத்திகளை மேற்கொள்ளுதல்<br>**V.** புகையிரத அபிவிருத்திச் செயற்திட்டங்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்கு புகையிரத காணிகளில் புகையிரத வரிசைகளுடன் சேர்த்து ஏடிபீ நிதியீட்டத்தின் கீழ் சிறியளவிலான வீடமைப்பு திட்டங்களை நிர்மாணித்தல்.<br><br>எனினும் போக்குவரத்து அமைச்சு செயலாளரின் மேற்படி அங்கீகாரத்திற்கு | முகாமைத்துவம் | வேண்டிய அபிவிருத்தி இடையீடுகளின் பட்டியல் எஸ்எல்ஆர், எம்ஓரீ, ஈஆர்டி போன்றவற்றுடன் ஏடிபீ பணி ஒதுக்கக் கூட்டத்தில் மேலும் கலந்துரையாடப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக ஏடிபீ மற்றும் ஜீஓஎஸ்எல் இற்கிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் ஆர்ஈஜபி இன் கீழான விடயங்களின் பட்டியல் உள்ளடக்கப்படுகின்றது. | க பணத்தை ஒதுக்கீடு செய்வதற்கு அமைச்சரவை தீர்மானம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | முரணாக ஐ.அ.டொலர் 62.79 மில்லியன் தொகையை ஒதுக்கீடு செய்வதன் மூலம் ஏனைய 13 உப முன்மொழிவுகளிற்காக ஏடிபீயுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | |
| (இ) | 13 முன்மொழிவுகளின் கீழ் காணப்படும் கண்டியை அண்டிய புகையிரதச் செயற்திட்டத்தின் சாத்தியவள ஆய்வை மேற்கொண்டு விபரமான வடிவமைப்பை தயாரிப்பதற்கு யூரோ 1,385,208, ஐ.அ.டொலர் 2,642,014 மற்றும் ரூபா 194,127,100 ஆகக்கூடிய தொகையில் வெளிநாட்டு மதியுரை நிறுவனமொன்றுடன் மதியுரை உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2018 மே 16 இல் வழங்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் முன்னரான சாத்தியவள அறிக்கை என்பவற்றிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 27,919,897 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மோசமான ஒப்பந்த அமுல்ப்படுத்தல் | கண்டி நகரத்தின் போக்குவரத்து நெரிசலை குறைப்பதன் மூலமும் கண்டி நகரத்தில் புகையிரத பிரயாணிகளின் பங்கை அதிகரிப்பதன் மூலமும் தேசிய பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை கண்டியை அண்டிய புகையிரத அபிவிருத்திச் செயற்திட்டம் வழங்கும். | முழு முன்மொழிவுகளையும் அமுல்ப்படுத்தும் போது அமைச்சரவை தீர்மானம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்வதற்காக அதிகபட்ச நேரங்களில் பிரதான நிலையங்களில் உள்ள நீண்ட வரிசையை குறைத்தல் மற்றும் பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளும் கிரயத்தை சேமித்தல் நோக்குடன் பயணச்சீட்டு வழங்கல் முறைமையை அமுல்ப்படுத்துவதற்கு ரூபா 4,502 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமை | மோசமான செயற்திட்ட அமுல்ப்படுத்தல் | கடந்த 05 ஆண்டுகளிற்கு மேலாக பிரயாணிகளின் நடைமுறை வருடாந்த அதிகரிப்பை என்பிடி கணிப்பீட்டுத் தாள் கருத்தில் கொண்டிருந்தது. ஆர்ஈஜபி இன் ஏடிபீயின் பொருளாதார பகுப்பாய்வு வருடாந்தம் 5.5% நடைமுறை அதிகரிப்பை கருத்தில் கொண்டிருந்தது. இரண்டு பகுப்பாய்வுகளும் அபிவிருத்தியின் பின்னர் | பயணச்சீட்டு வழங்கல் முறைமைக்கு முன்னர் புகையிரத வரிசைகளின் மின்மயமாக்கலிற்கான அடித்தளம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. எனினும் புகையிரத வரிசைகளின் மின்மயமாக்கலிற்கு அடித்தளம் அமைக்கப்படாமல் புகையிரத செயற்பாட்டு வினைத்திறன் முன்னேற்றத்தை கணக்காய்வின் போது மதிப்பிட முடியாதிருந்தது. | | (மின்மயமாக்கலின் பின்னர்) கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | |
| (உ) | தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த சமூக பொருளாதார கிரய நலன் பகுப்பாய்வின் பிரகாரம் புகையிரதங்களின் தாமதக் காலத்தை குறைத்தல் காரணமாக போக்குவரத்து நேரத்தை சேமித்தல் கருத்தில் கொள்ளப்பட்டிருந்தது. 10% கழிவு விகிதத்தில் முதலீட்டிற்காக ரூபா 7,770 மில்லியன் தேறிய வருமானத்தை செயற்திட்டம் ஈட்டுகின்றமை கண்டறியப்பட்டதால் செயற்திட்டம் பொருளாதார ரீதியாக சாத்தியமானது. மேலும் பொருளாதார உள்ளக வருமான விகிதம் (18.8%) பொருளாதார மூலதன சந்தர்ப்பக் கிரயத்தை (10%) விஞ்சுகின்றது. எதிர்பார்க்கப்பட்ட புகையிரத தாமதக் குறைப்பு நலன்களிற்கு பொருளாதார நம்பகத்தன்மை மிகவும் உணர்திறனுடையதென உணர்திறன் பகுப்பாய்வு சுட்டிக்காட்டுகின்றது. கால தாமதத்தை குறைத்தல் 10% இலிருந்து 6.2% வரை குறைந்தால் செயற்திட்டம் பொருளாதார ரீதியாக சாத்தியப்படாது. எனினும் புகையிரத தாமதத்திற்கு முக்கிய காரணம் எச்சரிக்கைகள் விதித்தல், நிலைப்படுத்தல் (ballast) போதாமை, வார புகையிரதம் காணப்படாமை மற்றும் | மோசமான செயற்திட்ட எதிர்வுகூறல் | சமூக பொருளாதார கிரய நலன் பகுப்பாய்வுகளை தயாரிக்கும் போது என்பிடி ஆல் கருத்தில் கொள்ளப்படும் அனைத்து காரணிகளும் என்பிடி இன் கணிப்பீட்டுத் தாளிலிருந்து புலப்படுவதில்லை. மேலும் புகையிரத தாமதங்களிற்கான பிரதான காரணமாக வழி மற்றும் வேலை எச்சரிக்கைகள் காணப்படவில்லை. | உள்நாட்டில் இதே போன்ற துறையில் நிபுணத்துவமுடைய உத்தியோகத்தர்களின் உதவியுடன் சமூக பொருளாதார கிரய நலன் பகுப்பாய்வு மற்றும் பொருளாதார நம்பகத்தன்மையை மீள கருத்தில் கொள்ளுதல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | sleepers போதாமை என்பன மேலும் அவதானிக்கப்பட்டன. | | | |
| (ஊ) | இலங்கை புகையிரத நிலையத்தின் பிரச்சனை பகுப்பாய்வின் பிரகாரம் நாளொன்றிற்கு ஏறத்தாழ 350 புகையிரதங்கள் (வருடமொன்றிற்கு ஏறத்தாழ 128,700) செயற்படுத்தப்படுகின்றதுடன் கிடைக்கக்கூடிய புள்ளிவிபரங்களின் பிரகாரம் 62% புகையிரதங்கள் அவற்றின் பட்டியலிடப்பட்ட நேரத்தின் 10 நிமிடத்துக்குள் செயற்படுத்தப்படுகின்றன. ஏறத்தாழ 30% புகையிரதங்கள் நாளாந்தம் பட்டியலிடப்பட்ட நேரத்தை விட 11 நிமிடத்திற்கு மேல் தாமதமாக வருகின்றதுடன் ஏறத்தாழ 8% புகையிரதங்கள் ஒரு மணித்தியாலத்திற்கு மேல் தாமதமாகின்றன. புகையிரத சாரதிகளிற்கும் கட்டுப்பாட்டாளரிற்கும் இடையேயான தொடர்பாடல் சிக்கல்கள் அவ் வகை தாமதங்களிற்கு பங்களிக்கும் காரணங்களில் ஒன்றாக உள்ளதுடன் இது மிகக் குறைவானது. செயற்திட்டத்தின் கிரய பிரித்தெடுப்பின் பிரகாரம் வினைத்திறனானதும் பாதுகாப்பானதுமான புகையிரத செயற்பாடுகளை அடைந்துகொள்ளும் பொருட்டு தீவளாவிய றேடியோ தொலைத்தொடர்பு முறைமையை (ஐஆர்ரீஎஸ்) அமுல்ப்படுத்துவதற்கு ரூபா 3,632 மில்லியன் கிரயம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் தாமதத்திற்காக சுட்டிக்காட்டப்பட்ட காரணங்கள் புகையிரத செயற்பாட்டு மீளாய்வுக் கூட்டக் குறிப்பின் மூலம் | மோசமான செயற்திட்ட அமுல்ப்படுத்தல் | புகையிரத தாமதங்கள் பற்றிய தெளிவான யோசனையொன்றை பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு தாமத வகைப்படுத்தலின் கீழும் நிமிடங்களில் ஏற்படும் தாமத அளவு கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பகுப்பாய்வானது புகையிரதங்களின் எண்ணிக்கை அல்லது சம்பவங்களின் எண்ணிக்கையை குறிக்கின்றதுடன் தாமதமான நிமிடங்களின் எண்ணிக்கையை குறிக்கவில்லை. இது நிமிடங்களில் தாமதம் தொடரப்படுகின்றதை கருத்தில் கொண்டு விளைவு வேறுபடுகின்றது. தற்போது எஸ்எல்ஆர் இல் முறையான தொடர்பாடல் முறைமை காணப்படவில்லை. தாமதங்கள் காட்டப்படாதமைக்கு செயற்பாட்டு நிமிடங்களிலுள்ள அனைத்து வகையான தாமதங்களிற்கிடையேயும் காணப்படும் தொடர்பாடல் தவறுகள் காரணமாக இருக்கக்கூடும். | உள்நாட்டில் இதே போன்ற துறையில் நிபுணத்துவமுடைய உத்தியோகத்தர்களின் உதவியுடன் சமூக பொருளாதார கிரய நலன் பகுப்பாய்வு மற்றும் பொருளாதார நம்பகத்தன்மையை மீள கருத்தில் கொள்ளுதல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | இனங்காணப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. ஆகையால் செயற்றிட்டம் சாத்தியமான செயற்றிட்டமாக கருதப்பட்டிருக்கவில்லை. | | | |
| (எ) | தொடர்பாடல் முறைமையை பயன்படுத்தாமல் புகையிரத திணைக்களத்தில் 30 எண்ணிக்கையான அதிர்வெண் தொகுதிகள் ஏற்கனவே உள்ளன. சமிக்ஞை பிரிவுத் தலைவரால் வழங்கப்பட்ட விளக்கத்தின் பிரகாரம் இலங்கை புகையிரத திணைக்களத்தில் காணப்படக்கூடிய 30 எண்ணிக்கையான அதிர்வெண் தொகுதிகளை பயன்படுத்தி ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1 மில்லியன் கிரயத்தில் புதிய முறைமையை அவர்களால் அமுல்ப்படுத்த முடியும். எனினும் டயலக்குடன் புதிதாக முன்மொழியப்பட்ட தொடர்பாடல் முறைமை ஏறத்தாழ ஐ.அ.டொலர் 6.5 மில்லியன் மேலதிக கிரயத்தை கருத்தில் கொள்ளாமல் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மோசமான செயற்திட்ட அமுல்ப்படுத்தல் | வடக்கு வரிசைக்கான 14 அதிர்வெண் தொகுதிகளை மாத்திரமே எஸ்எல்ஆர் பயன்படுத்துகின்றது. இது எஸ்எல்ஆர் இன் தற்போதைய தேவைப்பாடாகும். அதிர்வெண்களிற்கான ஏதாவது கொடுப்பனவிலிருந்து புதிய தீவளாவிய புகையிரத தொடர்பாடல் முறைமை இலவசமாகும். | தற்போதுள்ள தொடர்பாடல் முறைமை தொடர்பாக ஆழமாக வலியுறுத்தப்பட்டது. இவ் வகை செயற்றிட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு முன்னர் எதிர்கால கிரய நலன்களை அதிகரிப்பதாக புகையிரதம் செயற்படுதல். |

### 3.3 வழமைக்கு மாறான நடவடிக்கை

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| பயிற்சி செயற்பாடு இச் செயற்திட்டத்தின் அதிகார எல்லையின் கீழ் வராத போதிலும் செயற்திட்டத்தின் பதவியணி உறுப்பினர்களிற்கான பயிற்சி கற்கைநெறிகளை பின்பற்றுவதற்கு பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் நிறுவனத்திற்கு ரூபா 310,000 தொகை | செயற்திட்டத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் தவிர்ந்தவைக்கு செயற்திட்ட நிதிகள் செலவிடப்பட்டிருந்தன. | செயற்திட்டத்துடன் தொடர்புடைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் சார்பில் ஏற்பட்ட அனைத்து பயிற்சி கிரயங்களும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு செயற்பாட்டுக் கிரயத்தில் உள்ளடக்கப்படுகின்றன என | நிதிக் கட்டுப்பாடுகள் வலுப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| செலுத்தப்பட்டு செயற்திட்ட செலவினமாக கருதப்பட்டிருந்தது. மேலும் இது பின்னோக்கிய நிதியீட்டத்தின் கீழ் தகுதியற்ற செலவினமாக கருதப்பட்டிருந்தது. | | தெரியப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி அனைத்து பயிற்சி கிரயங்களையும் தகுதியான கிரய கூறொன்றாக ஏடிபீ ஏற்றுக்கொள்வதன் மூலம் இது மேலும் நிரூபிக்கப்பட்டிருந்தது. | |

**3.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்ட நிர்வாக கைநூல் பகுதி இ அட்டவணை 4 இன் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக தனியான செயற்திட்ட முகாமைத்துவ அலகு ஸ்தாபிக்கப்பட்டிருக்க வேண்டியதுடன் 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணியினரின் சம்பளங்கள் தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பதவியணியினரிற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வேண்டும். எனினும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து உரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமலும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு ஸ்தாபிக்கப்படாமலும் ரூபா 25.4 மில்லியன் தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் தவறான விளக்கம் மற்றும் சம்பளத்தின் முறையற்ற கொடுப்பனவு. | எம்எஸ்டியின் அங்கீகாரங்களிற்கிணங்க அனைத்து செயற்திட்ட பதவியணியினரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் 01/2019 ஆம் இலக்க எம்எஸ்டி சுற்றறிக்கையின் பிரகாரம் பிஎம்யூ ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளின் நோக்கெல்லை மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் சுற்றறிக்கை அறிவுறுத்தலுடன் இணங்க வேண்டும். |

**3.5 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| கடன் வழங்கும் முகவருடன் கடன் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு முன்னர் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தவதற்கு உரிய அதிகாரிகளின் அங்கீகாரங்கள் பெறப்பட வேண்டிய போதிலும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் இடையில் கடன் உடன்படிக்கையை கைச்சாத்திட்ட திகதியிலிருந்து 10 மாத தாமதங்களுடன் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. | கட்டுப்பாட்டு நடைமுறையில் பலவீனம். | 2019 மே மற்றும் யூன் மாதத்தில் ஆர்ஈஜபி தொடர்பாக என்பிடி இற்கு போக்குவரத்து அமைச்சு கோரிக்கையை அனுப்பியிருந்தது. | கட்டுப்பாட்டு முறைமை நடைமுறை பலப்படுத்தப்பட வேண்டும். |